# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2047/7 - 2017 නොවැම්බර් මස 27 වැනි සඳුදා - 2017.11.27

*2047/7 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### சப்பிரகமுவ மாகாண மாகாண சபை

*சப்பிரகமுவ மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கிராம அபிவிருத்தி நியதிச் சட்டம்*

*2017.11.01 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ தவிசாளர் அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*

*2017.11.14 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதி அளிக்கப்பட்டது.*

*சப்பிரகமுவ மாகாண மாகாண சபையின் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாண மாகாண சபை**

*சப்பிரகமுவ மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கிராம அபிவிருத்தி நியதிச் சட்டம்*

*2017.06.27 ஆந் திகதி சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2017.11.14 ஆந் திகதி சப்பிரகமுவ மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களினால் அனுமதியளிக்கப்பட்ட சபரகமுவ மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கிராம அபிவிருத்தி நியதிச் சட்டம் அனைவரும் அறிந்து கொள்வதற்காக இங்கு கீழே பிரசுரிக்கப்படுகின்றது.*

*பீ.எஸ். ஆர்.எம். விஜயராஜ,*<br>
*சபைச் செயலாளர்,*<br>
*சப்பிரகமுவ மாகாண சபை.*

*சப்பிரகமுவ மாகாண சபை,*<br>
*2017, நவெம்பர் 22.*


1A - PG 3784 — 12 (2017/11)



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, கிராம அபிவிருத்தி நியதிச்சட்டம்**

*சமூக நலன்புரி, நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பராமரிப்பு மற்றும் கிராமியக் கைத்தொழில் அமைச்சு*

**2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, கிராம அபிவிருத்தி நியதிச்சட்டம்**

சப்பிரகமுவ மாகாணத்தின் கிராம அபிவிருத்திச் சங்கங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல், சமூக தலைமைத்துவப் பயிற்சி நிலையங்களை நடாத்திச் செல்லல், கிராம அபிவிருத்தி வலயங்களை ஸ்தாபித்தல், பிரதேச அதிகார சபைகளை ஸ்தாபித்தல், மாவட்ட அதிகார சபைகள் மற்றும் மாகாண அதிகார சபைகளை ஸ்தாபித்தல் அத்துடன் அவற்றை நடாத்திச் செல்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அவற்றுடன் தொடர்புடைய அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடுகளைச் செய்வதற்குமானதொரு நியதிச் சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சப்பிரகமுவ மாகாணத்தின் மாகாண சபையினால் பின்வருமாறு விதிக்கப்படுகின்றது.

*2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கிராம அபிவிருத்தி நியதிச்சட்டம் செல்லுபடியற்றதாகி இல்லாதொழியும் என்பது பற்றி.*

இந்நியதிச் சட்டம் விதிக்கப்படுவதன் மூலம் இதற்குமுன் இம்மாகாண சபையினால் விதிக்கப்பட்டுள்ள 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க, கிராம அபிவிருத்தி நியதிச் சட்டம் செல்லுபடியற்றதாகி இல்லாதொழியும்.

இந்நியதிச்சட்டம்–

*சுருக்கப்பெயரும் செயற்படும் திகதியும்.*

01. 2017 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, கிராம அபிவிருத்தி நியதிச்சட்டமென அறிமுகப்படுத்தப்படும். அத்துடன் இந்நியதிச் சட்டம் சப்பிரகமுவ மாகாண சபையின் ஆளுநர் அவர்களின் அங்கீகாரம் கிடைத்த திகதி தொடக்கம் செயற்படும்.

*குறிக்கோள்கள் மற்றும் பணிகள்.*

02. (அ) மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் பங்கேற்புடன் பொருளாதார, சமூக, கலாச்சார, கல்வி மற்றும் ஆன்மீக அபிவிருத்தி நோக்கமாக கிராம அபிவிருத்திச் சங்கங்களை ஸ்தாபித்தல், பதிவு செய்தல், நாத்திச் செல்லல் மற்றும் மேற்பார்வை செய்தல்:

(ஆ) பிரசைகளை, பிரசைகளைக் கொண்டே பலப்படுத்தல்;

(இ) சமூகத் தலைமைத்துவம் தொடர்பாக பயிற்சியளித்தல்;

(ஈ) மாதர் அபிவிருத்தி நிலையங்களினூடாக கிராமப் பெண்களின் பிறவித் திறமைகளை வெளிக் காட்டுவதன் மூலம் அவர்களது பொருளாதாரம் மற்றும் சமூக நிலையை மேம்படுத்தல்;

(உ) புதியதோர் அபிவிருத்தித் திறன் முறையொன்றுடன் கிராமிய இளைஞர்களை அபிவிருத்தி முன்னோடி களாக்குதல்;

(ஊ) மாகாண சபையின் அபிவிருத்திக் கொள்கைகள் தொடர்பில் அறிவுறுத்தல் மற்றும் ஒத்துழைப்புடனான அபிவிருத்தி முறைகளினூடாக சங்கங்களை நடாத்திச் செல்வதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.

(எ) தார்மீக சமுதாயமொன்றைக் கட்டியெழுப்புவதற்காக சங்கங்களைப் பலப்படுத்தல் ;

(ஏ) பிரதேச செயலகப் பிரிவுகள் மூலமாக மாவட்ட மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் சங்கங்களுக்கிடையில் செயலாற்றுத் திறன் போட்டிகளை நடாத்தி கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அபிமானத்தை மேம்படுத்தல் ;

(ஐ) மொத்தமாக கிராம அபிவிருத்திச்சங்க அதிகாரப் பிரதேசத்தில் மக்களின் தொழில் திறமைகளை அபிவிருத்தி செய்தல், வழிகாட்டுதல், தொழிற்பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சுயதொழில்களில் ஈடுபடச் செய்தல்.

03. (அ) கிராம அபிவிருத்தி விடயப் பொறுப்பான செயலாளர், இந்நியதிச் சட்டம் தொடர்பான பிரதான அதிகாரியாதல் வேண்டும்; *இயக்க அமைப்பு.*

(ஆ) அமைச்சின் செயலாளருக்கு உதவுவதற்காக இலங்கை நிருவாகச் சேவையின் II ஆம் தரத்தின் பணிப்பாளர் ஒருவரும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் சேவை முதுமை அடிப்படையில் இரு மாவட்டங்களுக்காகவும் உதவிப் பணிப்பாளர் ஒருவரும் நியமனம் செய்யப்படுதல் வேண்டும் ;

(இ) கிராம அபிவிருத்திப் பணிப்பாளருக்கு உதவுவதற்காக கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய இரு மாவட்டங்களுக்காகவும் சேவை முதுமையின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இருவர் நியமனம் செய்யப்படல் வேண்டும். அத்துடன் மாகாணத்திற்குள் கருத்திட்டங்களை ஒழுங்கு செய்தல், அவற்றை நடாத்திச் செல்லல் மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளுக்காக சேவை முதுமையின் அடிப்படையில் தலைமையகக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரும் நியமனம் செய்யப்படுதல் வேண்டும் ;

(ஈ) மாவட்ட உத்தியோகத்தர்களுக்கு உதவுவதற்காக பிரதேச செயலகப் பிரிவொன்றிற்கு ஒருவர் வீதம் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்;

(உ) ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவும் உள்ளடங்கும் வகையில் மாதர் அபிவிருத்தி நிலையங்களை நடாத்திச் செல்வதற்காக தையல் ஆலோசகர்கள் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

04. (அ) இதுவரையும் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அனைத்துக் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் இந்நியதிச் சட்டம் செயற்படும் திகதி தொடக்கம் 3 மாத கால எல்லைக்குள் மீளமைந்து மாகாணக் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் மீளவும் பதிவு செய்து கொள்ளப்படல் வேண்டும்; *கிராம அபிவிருத்திச் சங்கங்களை மீளமைத்தல்.*

(ஆ) மேற்கூறிய பிரிவின்படி இந்நியதிச் சட்டம் செயற்படும் திகதி தொடக்கம் புதிய அபிவிருத்திச் சங்கங்களை ஸ்தாபித்தல் மற்றும் பதிவு செய்தல் ஆகிய பணிகளை புதிய யாப்பின்படியும் சட்ட விதிகளுக்கு இணங்கவும் மேற்கொள்ளப்படல் வேண்டும் ;

(இ) மேற்கூறிய கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு ஏற்புடைய அமைப்பு விதிகளை, கிராம அபிவிருத்தி விடயப் பொறுப்பான அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலகப் பிரிவொன்றிற்கு கட்டாயமாக பிரதேச கிராம அபிவிருத்தி அதிகார சபையொன்று வீதம் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்;

(உ) இரத்தினபுரி மற்றும் கேகாலை ஆகிய இரு மாவட்டங்களுக்காகவும் இரண்டு மாவட்ட அதிகார சபைகள் ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்;

(ஊ) மாகாணத்துக்காக மாகாண அதிகார சபையொன்று ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும்;

(எ) ஒவ்வொரு பிரதேச அதிகார சபைக்காகவும், மாவட்ட அதிகார சபைக்காகவும் அத்துடன் மாகாண அதிகார சபைக்காகவும் வெவ்வேறாக நிதியங்களையும் கணக்குகளையும் பேணிச் செல்லல் வேண்டும்;

(ஏ) பிரதேச அதிகார சபையின் நிதியங்கள் அதிகார சபைகளின் அமைப்பு விதிகளுக்கு இணங்க ஒழுங்கு செய்யப்படுதல் வேண்டும்.

05. (அ) சப்பிரகமுவ மாகாணத்திற்காக ஒரு நிதியத்தைப் பேணிச் செல்லலாம். அந்த நிதியம் பின்வரும் மூலங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:- *நிதியங்கள்.*

(i) வருடாந்த நிதிக்கூற்றின் மூலம் மாகாண சபையினால் ஒதுக்கப்படக்கூடிய ஒதுக்கீட்டுப் பணத்தொகைகள்;

(ii) அரசாங்கத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படக்கூடிய வெளிநாட்டு உதவிப் பணத்தொகைகள்;

(iii) எவரேனுமொரு நபரினால் அல்லது நிறுவனத்தினால் வழங்கப்படும் அன்பளிப்புகள்;

(iv) கிராம அபிவிருத்திச் சங்கங்களால் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் கட்டுமானப் பணிகள் மூலம் சம்பாதிக்கப்படும் வருமானத்திலிருந்து அறவிடப்படும் பணத்தொகைகள்;

(v) லொத்தர் சீட்டிழுப்பு, கண்காட்சிகள் அல்லது ஏனைய அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகள் மூலம் கிடைக்கும் பணத்தொகைகள்;

(vi) அங்கத்துவப் பணத்தொகைகள், செயலணி வெற்றிகளின் மூலம் கிடைக்கும் பணத்தொகைகள் மற்றும் விசேட அளிப்புகள்.

(ஆ) இப்பணிக்காக விடயப் பொறுப்பான அமைச்சரால் 7 பேர்கள் அடங்கிய நிதியக்குழுவொன்று நியமனம் செய்யப்படுதல் வேண்டும். அக்குழுவில் பின்வருவோர்கள் அடங்கியிருத்தல் வேண்டும்:-

(i) அமைச்சின் செயலாளர்;

(ii) கிராம அபிவிருத்தி மாகாணப் பணிப்பாளர்;

(iii) மாகாண சபையின் கிராம அபிவிருத்தி விடயப் பொறுப்பான அமைச்சரின் சிபாரிசின்படி இரு அங்கத்தவர்களும் நிதி விடயம் பொறுப்பான அமைச்சரினதும் அமைச்சரவையினதும் சிபார்சுகளின்படி மூன்று அங்கத்தவர்களுமாக ஐந்து அங்கத்தவர்கள் நியமனம் செய்யப்படுதல் வேண்டும். (இந்த ஐந்து அங்கத்தவர்களும் அரசாங்க உத்தியோகத்தர்களாக அல்லது விடயம் தொடர்பில் அறிவுடையவர்களாக இருத்தல் வேண்டும்);

(iv) கிராம அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் குழுவின் தவிசாளர் ஆவார்;

(இ) நிறைவெண் பூர்த்தியடைவதற்கு ஆகக் குறைந்தது மூன்று பேர்களாவது சமுகமளித்திருத்தல் வேண்டும்;

(ஈ) இந்நிதியம் அரசியலமைப்பின் 154 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்விற்கு உட்படும்.

நிதியத்தின் பணிகள்.

06. (அ) சமூக தலைமைத்துவ பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு;

(ஆ) அந்தந்த ஆண்டுகளில் பயனுள்ளதாக சமூக ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்ட ஏற்பாடுகள் மற்றும் சமூகத் தலைவர்களை பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் மதிப்பிடுதல் மற்றும் அது தொடர்பில் விருதுகளை அல்லது பரிசுப் பணத்தொகைகளை வழங்குதல்;

(இ) காலத்துக்கேற்றவாறு அபிவிருத்திக்கு உதவும் துறைகளை அறிமுகப்படுத்தல், செயற்படுத்தல் மற்றும் உதவியளித்தல்;

(ஈ) பொருளாதார, சமய, சமூக மற்றும் நல்லொழுக்க அபிவிருத்திக்காக சிறந்த பயனுள்ள கருத்திட்டங்களை அறிமுகப்படுத்தல் மற்றும் அவற்றைச் செயற்படுத்துவதற்கு உதவியளித்தல்.

பிணக்குகளைத் தீர்த்தல்.

07. (அ) கிராம அபிவிருத்திச் சங்கங்களில் ஏற்படும் பிணக்குகள் தொடர்பாக விடயப் பொறுப்பான அமைச்சரால் தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படல் வேண்டும்;

(ஆ) அந்தத் தீர்வுகளின் மூலம் திருப்தியடையாத இயக்கமொன்றினால் அல்லது நபரொருவரால் விடயப் பொறுப்பான அமைச்சரிடம் மேன்முறையீடு செய்யப்படலாம். அத்துடன் அந்தப் பிணக்குத் தொடர்பிலான இறுதித் தீர்ப்பு அமைச்சரின் கருத்தின்படியே அளிக்கப்படுதல் வேண்டும்.

08. இந்நியதிச்சட்டத்திற்கு ஏற்புடைய பணிகளுக்கான கட்டளைகள் விடயப் பொறுப்பான அமைச்சரால் விதிக்கப்படலாம். அத்துடன் அதற்காக மாகாண சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்; கட்டளைகள் மற்றும் விதிகளை ஒழுங்கு செய்தல்.

09. (அ) கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்காக மாகாண சபையின் நிதியத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட அனைத்துக் கட்டடங்களினதும் முழு உரிமையும் சப்பிரகமுவ மாகாண சபையின் சார்பில் இருப்பதுடன் அவற்றின் பொறுப்பு மாத்திரம் பதிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சார்பில் இருக்கும்;

(ஆ) கிராம அபிவிருத்திச் சங்கங்களின் உரிமையில் உள்ள ஏனைய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களினதும் முழு உரிமை மாகாண சபையின் சார்பில் இருக்கும். அத்துடன் பொறுப்பு மாத்திரம் ஏற்புடைய சங்கங்களின் சார்பில் இருக்கும்;

(இ) கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பொறுப்பிலுள்ள ஏதாவதொரு அசைவற்ற ஆதனத்திற்குட்பட்ட கட்டடமொன்று, காணியொன்று அல்லது நிரந்தர ஆதனமொன்று தொடர்பில் உடைத்து நீக்கம் செய்தல், புதிதாக அமைப்பதற்காக அமைப்பை மாற்றம் செய்தல் ஆகிய எந்தவொரு நடவடிக்கையின் போதும் அமைச்சின் செயலாளரின் பூரண அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(ஈ) கிராம அபிவிருத்திச் சங்கங்களின் உடமையிலுள்ள ஏதாவதொரு அசைவற்ற ஆதனம் அல்லது அசைவுள்ள ஆதனம் கிராம அபிவிருத்திச் சங்கப் பணிகளிலிருந்து வெளிவாரிப் பணியொன்றிற்காக தேவைப்படும் சந்தர்ப்பமொன்றில் அந்த ஆதனம் பெற்றுக் கொடுக்கப்படலாம். அதற்காகப் பணம் அறவிடுதல் அல்லது அறவிடப்படாதிருத்தல் தொடர்பில் கிராம அபிவிருத்திச் சபையின் பொதுச் சபைக் கூட்டமொன்றில் எடுக்கப்படும் தீர்மானமொன்றின்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

10. இந்நியதிச் சட்டத்தின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிச் செயற்படல் வேண்டும்.

12 - 322

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.